செய்திருக்கிறார்கள். ஆங்கிலத்திற்கு முதலிடம் இல்லாமல் தமிழுக்கு முதலிடம் கொடுத்து தமிழைச் சிறிய எழுத்தில் போடாமல் ஆங்கிலத்தைப்போல் பெரிய எழுத்திலே போட்டு அந்த அகர வரிசையை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்சினை நியாயமானதும் சிந்திக்க வேண்டியதும் தான். தமிழுக்கு முதலிடமும் ஆங்கிலத்திற்கு பின்னாலேயும் இடம் கொடுக்கிற முறை இனிமேல் கடைபிடிக்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: அகர வரிசை ஆங்கிலத்தில் தான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் அகர வரிசையை கடைபிடிப்பார்கள்.

[முற்பகல் 10—10]

(ஆ) உறுப்பினர் இருக்கையில் ஆணி இருந்தது குறித்து.

திரு. கே. பண்ணை சேதுராம்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நான் நேற்றைய தினம் அவைக்கு வரும்பொழுது என்னுடைய இருக்கையிலே மூன்று இஞ்ச் நீளமுள்ள ஆணி இருந்தது. அது சாதாரணமாக ஏற்பட்டது என்று நினைத்து அதைத் தலைவரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வராமல் வெளியிலே தூக்கியெறிந்துவிட்டேன். ஆனால், இன்றைக்குப் பார்க்கும்பொழுதும் கூர்மையான ஆணியும், பென்சிலும் என்னுடைய இருக்கையில் பொருத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எழுத்து மூலமாகத் தாருங்கள். அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, அது அரசாங்கத்தின் சொத்து என்ற காரணமாக, அதை நீங்கள் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(இ) கட்டிடத் தொழிலாளர்கள், கைது செய்யப்பெற்றது குறித்து.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள், அவர்கள் தங்கள் கோரிக்கையை வற்புறுத்துகின்ற முறையிலே கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் ஊர்வலம் வந்தவர்கள் கிட்டத்தட்ட 500 பேர்களுக்கு மேல் கைதாகி உள்ளே இருக்கிறார்கள். அது சம்பந்தமாக.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்கின்ற பதிலில் அடங்கியிருந்தாலும் அடங்கலாம். இருந்தாலும் இது அந்த நேரத்திலே எழுப்பப்படவேண்டிய பிரச்னை. முதலமைச்சரவர்கள் சொல்கிற பொழுது, விருப்பம் இருக்குமானால் அப்பொழுது எழுப்பலாமே தவிர, இப்பொழுது எழுப்பக் கூடாது.

(3) அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் விவாதம் (தொடர்ச்சி).

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்டனத் தீர்மானத்தின் மீது பதில் சொல்கின்ற தொடர்ச்சியாக அண்மையில் நடந்த காவலர் போராட்டத்தைப் பற்றி நான் சில உண்மைகளை இங்கே சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். காவல் துறை போராட்டத்தில் காவல் துறையினர் எந்த அளவிற்கு அதிலே பங்கு கொண்டார்கள் என்பதையும், அதிலே வெளியார்கள் எந்த அளவிற்கு அவர்களைத் தூண்டி விடுவதற்கு உடன்பட்டார்கள் என்பதைப்பற்றியும் நான் முன்னமேயே வாய்ப்புக் கிடைத்த பொழுதெல்லாம் வெளியிட்டிருக்கிறேன். அதைப்பற்றிப் பல்வேறு எதிர்க் கருத்துக்களையும் மாண்புமிகு உறுப்பினர்களிலே பலரும், அதைப்போல வெளியே இருக்கின்ற—இந்த மாமன்றத்திலே இல்லாதவர்களும்கூட கருத்துக்கள் சொல்லியிருக்கிறார்கள்.

சங்கம் வைக்கின்ற உரிமை வேண்டுமென்ற பிரச்னை எழுந்து, அதைப்பற்றி இந்த அரசு தன்னுடைய கவனத்தைச் செலுத்தி, முதலமைச்சரவர்கள் மாநாடு டெல்லி மாநகரத்திலே கூட்டப் பட்ட பொழுது, வேண்டுமா, வேண்டாமா என்று முடிவெடுக்க வேண்டுமென்ற கருத்து அதிலே கலந்து பேச வேண்டுமென்ற வகையில், அதைப்பற்றிக் குறிப்பாகக் குறிப்பிடாவிட்டாலும், நாட்டிலே ஒட்டுமொத்தமாக, இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் இருக்கின்ற இதைப்போன்ற பிரச்னைகளைப்பற்றி, போராட்டங்களைப்பற்றியெல்லாம் முடிவெடுக்க வேண்டுமென்ற கருத்து, சட்டம்—ஒழுங்கு காப்பாற்ற எப்படி வழிவகை காண்பது என்ற நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு அந்தக் கூட்டம் அங்கே கூட்டப்பட்டது.

நான் அதற்குச் செல்வதற்கு முன்பாகவே, எங்களுடைய அமைச்சரவையிலே இருக்கின்ற பொறுப்பு வாய்ந்தவர்களை யெல்லாம், பொறுப்பிலே இருப்பவர்களையெல்லாம் கலந்து, அதிகாரிகளையும் கலந்து, சங்கம் வைப்பதற்கு அனுமதி அளிப்பது என்ற கருத்தை வெளியிட்டுவிட்டு நான் அங்கே சென்று, நாங்கள் என்ன முடிவு எடுத்திருக்கிறோம் என்பதைச் சொன்னேன். ஒவ்வொரு மாநிலத்திலேயிருந்து வந்திருந்த பல்வேறு முதலமைச் சர்கள், அதிகாரிகள், அவரவர்கள் கருத்தை அங்கே வெளி யிட்டார்கள். இறுதியாக, எங்களுடைய முடிவை நாங்கள் பின் பற்றுவதிலே ஆட்சேபனை இல்லை என்கின்ற வகையிலே